[21st January 1961

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : பக்கத்திலே ஒரு உயர்தர பள்ளிக்கூடம் இருந்தும், சில இடங்களில் அனுமதி கொடுக்கப்பட்டு இருக்கிறது. இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த மாதிரி இருக்கக் கூடிய கேஸ்களைக் குறித்துக் கொடுத்தால், கேட்பதற்கு வசதியாக இருக்கும்.

SRI A. VEDARATHNAM : திருத்துறைப்பூண்டி தாலுகாவில் 10 பள்ளிக்கூடங்கள் அப்-கிரேட் செய்வதற்காக விண்ணப்பித்திருந்தும், 10 விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. அது எந்த காரணத்தினுல் நிராகரிக்கப்பட்டது என்று கூற முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் சொன்ன காரணத்தினுல்தான். நாகப்பட்டிணத்தில் 5 பள்ளிகளுக்கு 5 பள்ளிகள் அங்கிகரிக்கப்பட்டிருப்பதை கனம் அங்கத்தினர் கவனிக்க வேண்டும். ஆகவே, ஆங்காங்கே இருக்கக்கூடிய அத்தியாவசியத்தை அனுசரித்தே, போதுமான பள்ளிக்கூடங்களுக்கு அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

Teachers Training Colleges

* 73 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-61-ல் இம்மாநிலத்திலுள்ள பி.டி. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒவ்வொன்றிலும் எத்தனை பயிற்சியாளர்களுக்கு இடமிருக்கின்றது ?

(இ) அவை ஒவ்வொன்றிலும் இந்தக் கல்வி ஆண்டில் எத்தனை பயிற்சியாளர்கள் (விஞ்ஞானம், கணிதம், சமூகம் போன்ற சப்ஜக்ட் வாரியாக) சேர்ந்திருக்கிறுர்கள் ?

(உ) இம்மாநிலத்திலுள்ள பட்டதாரி ஆசிரியர் பற்றுக்குறையைப் போக்க இந்த எண்ணிக்கை போதுமானதா ?

(எ) இல்லையானுல் இந்தப் பற்றுக்குறையைப் போக்க என்ன முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) A statement [a] is laid the table of the House.

(*c*) Yes, Sir.

(*d*) Does not arise.

SRI A. VEDARATHNAM : இப்போது இந்த ஆண்டு அனுபவத்திலிருந்து நம்முடைய மாகாணத்திற்குப் போதுமான பட்டதாரி ஆசிரியர்களை இப்போதுள்ள கல்லூரிகளிலேயே தயார் செய்து விட முடியுமென்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு இருக்கிறதா ? அப்படி இல்லையானுல், இன்னும் பட்டதாரி ஆசிரியர் பயிற்சிக்கான கல்லூரிகள் தேவைப்படுமா ? அப்படித் தேவைப்பட்டால், அப்படிப்பட்ட கல்லூரிகளில் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான யோசனை அரசாங்கத்திடம் உள்ளதா ?

---

a Printed as **Appendix VII on page 246 infra.**

21st January 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : *சென்ற ஆண்டுவரையிலும் இப்போது இருக்கக்கூடிய கல்லூரிகளிலேயே போதுமான அளவு மாணவர்கள் வந்து சேரவில்லை. ஆனால், இந்த ஆண்டு கொஞ்சம் நிலைமை சீரடைந்து உள்ளது. ஆண்களுக்கு இருக்கக் கூடிய இடம் 965. ஆனால் 942 பேர்கள் தான் சேர்ந்திருக்கிறார்கள். இருபத்திமூன்று இடம் பாக்கியிருக்கிறது. அதுபோல் பெண்களுக்கு இருக்கக்கூடிய இடம் 400. அதில் 376 பேர்கள் தான் சேர்ந்திருக்கிறார்கள். இன்னும் 24 இடம் பாக்கியிருக்கிறது. இப்போது சம்பள உயர்வு கொஞ்சம் அதிகம் கொடுத்திருக்கின்ற காரணத்தினாலே, இந்த ஆண்டு அதிகம் பேர்கள் சேர்ந்திருக்கிறார்கள். இப்போது இருக்கக்கூடிய எல்லா இடங்களுக்கும், வருஷா வருஷம் சேர்ந்து விடுவார்களேயானால், நிலைமை சீரடைந்து விடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.*

Kattalai Pullambadi canals

* 74 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : *கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) கட்டளை, புள்ளம்பாடி கால்வாய்கள் கட்டும் வேலை முடிந்து விட்டதா ?

(இ) இதுவரை அவ்வேலையில் அமர்த்தியிருந்த வேலையாள்களை மற்றத் திட்டங்களிலும் அமர்த்தும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The work is nearing completion.

(*b*) The workers employed by the contractors have been taken away by them to other projects under execution or disbanded, if not required. Action is being taken to absorb the maistries and operators employed departmentally in other projects to the extent feasible.

University (Coimbatore)

* 75 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to start a University in the Coimbatore district?

THE HON. SRI C. SUBRAMANIAM : No final decision has been taken regarding the starting of new Universities.

SRI N. K. PALANISAMI : *கோயம்புத்தூரிலே, 2, 3 என்ஜினீயரிங் கல்லூரிகளும், கலாசாலைகளும், இன்னும் மருத்துவ கல்லூரி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினாலே, அங்கே பல்கலைக் கழகம் ஒன்றைத் துவங்க சர்க்கார் முன்வருவார்களா ?*

THE HON. SRI C. SUBRAMANIAM : *இப்போதே கனம் அங்கத்தினர் சங்கரன் அவர்கள் தன் கையைத் தூக்கிக் கொண்டு நிற்கிறார்கள். இதிலே இனி போட்டி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒரு சர்வகலாசாலை ஏற்படுத்துவது என்றால், யூனிவர்சிடி*